பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 12 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேச விரோத செயல்களை மக்கள் அனைவரும் ஒற்றிணைந்து முறியடிக்க வேண்டுமென குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.
2. 2035-ஆம் ஆண்டுக்குள் இந்தியா விண்வெளியில் தனது ஆய்வு மையத்தை அமைக்கும் என்று மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.
3. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை கோதுமை கையிருப்பு வரம்பில் திருத்தம் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
4. இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளுக்கு இடையேயான உத்திசார் ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.
5. உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **ding liren** - இடையேயான இறுதிச்சுற்று ஆட்டம் இன்று நடைபெறுகிறது,

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இந்தியாவின் வளர்ச்சியை பொருத்துக் கொள்ள முடியாத உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள சில சக்திகள் இந்தியாவை பிளவுபடுத்த முயற்சிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் குற்றம்சாட்டியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்த தேசவிரோத செயல்பாடுகளை முறியடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அரசியல் சாசனத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகளை திட்டமிட்டு சீர்குலைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா வளமான நாடு என்றும், உலகிற்கே தலைமை தாங்கும் நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும், அதை யாராலும் தடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

2035-ஆம் ஆண்டுக்குள் இந்தியா விண்வெளியில் தனது ஆய்வு மையத்தை அமைக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று அறிவியல் துறையின் சாதனைகளை விளக்கி செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2040-ஆம் ஆண்டில் இந்தியர் ஒருவர் நிலவில் கால் பதிப்பார் என்று கூறினார்.

மத்திய அரசு கொண்டு வந்த சீர்த்திருத்த நடவடிக்கைகள் காரணமாக விண்வெளித்துறையில் தனியார் துறையினரின் பங்கேற்பு அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.,

இந்தியாவிலிருந்து இதுவரை 432 வெளிநாட்டு செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதில் 90 சதவீத செயற்கைக்கோள்கள் கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் ஏவப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயிரி பொருளாதாரம், பாதுகாப்பு, வேளாண்மை ஆகிய துறைகளில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை கோதுமை கையிருப்பு வரம்பில் திருத்தம் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஒட்டுமொத்த உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பதுக்கலை தடுப்பதற்கும், மொத்த மற்றம் சில்லரை விற்பனையாளர்கள், மொத்த விற்பனை அங்காடிகளுக்கான கோதுமை இருப்புக்கான வரம்பை மத்திய வகுத்துள்ளது.

இவர்களுக்கான கோதுமை இருப்பு இரண்டாயிரம் மெட்ரிக் டன்னிலிருந்து ஆயிரம் மெட்ரிக் டன்னாக குறைக்கப்பட்டுள்ளது.

சில்லரை விற்பனைகளுக்கான வரம்பு கடை ஒன்றுக்கு பத்து மெட்ரிக் டன்னிலிருந்து ஐந்து மெட்ரிக் டன்னாக குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கோதுமை கையிருப்பு போதுமான அளவில் இருப்பதாகவும், அதன் விலையை அரசு தொடர்ந்து உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

கோதுமையை மொத்தமாக இருப்பு வைத்துள்ள நிறுவனங்கள் அதற்கான வலைதளத்தில் பதிவு செய்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையை தங்கள் இருப்பு நிலைமை புதுப்பிக்க வேண்டுமென்றும் அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் புதுதில்லியில் நேற்று புதுதில்லியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் ஆகியோரை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பு மரியதை நிமித்தமான சந்திப்பு என்றும், அவர்கள் இருவரிடமும் தாம் வாழ்த்து ெ
பற்றதாகவும் சமூக வலைதளப்பதிவில் திரு பட்நவிஸ் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட் கூட்டு ஆணையக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு எமிரேட் துணை பிரதமரும், வெளியுறவுத்துறை அமைச்சருமான  திரு ஷேக் அப்துல்லா பின் சையத் புதுதில்லி வந்துள்ளார்.

அவரது வருகை இரு நாடுகளுக்கும் இடையேயான விரிவான உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளுக்கு இடையேயான உத்திசார் ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

இதில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துணை பிரதமரும் பங்கேற்கின்றனர்.

இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டு ஆணையக்கூட்டம் 2022-ஆம் ஆண்டு துபாயில் நடைபெற்றபோது மத்திய அரசின் சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

அப்போது பரஸ்பரம் கலாச்சார கவுன்சில் அமைப்பை ஏற்படுத்துவது குறித்து இரு நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க வேண்டுமென மத்திய அரசு, இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இலங்கைக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஜா அந்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் திரு ராமலிங்கம் சந்திரசேகர், இணை அமைச்சர் திரு ரத்ன கமகே ஆகியோரை சந்தித்து மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக பேச்சு நடத்தினார்.

இந்த பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு சந்தோஷ் ஜா அப்போது வலியுறுத்தினார்.,

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை. திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட 23 மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடாப் பகுதியில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளதால் மறு உத்தரவு வரும் வரை மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முதல் விட்டு விட்டு மிதமானது முதல் கனமழை பெய்து வருகிறது.

சென்னையிலும் நேற்று முதல் மழைபெய்து வருகிறது.

தொடர்மழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, கரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டங்களில் இன்று நடைபெறுவதாக இருந்த அரையாண்டு தேர்வுகள் ஒத்தி வைக்கப்படுவதாக பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **ding liren** -இடையேயான இறுதிச்சுற்று ஆட்டம் இன்று நடைபெறுகிறது,

சிங்கப்பூரில் பிற்பகல் மணி 2-30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.,

கடைசி சுற்றில் வெற்றிபெறும் வீரர் பட்டத்தை வெல்வார்.

இப்போட்டி ட்டிராவில் முடிந்தால் டை-பிரேக்கர் முறை கடைபிடிக்கப்படும்.

[]<<<>>>[]

ஆசிய இளையோர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா — தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

உலக குழு ஸ்குவஷ் சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறும் காலிறுதி ஆட்ட்தில் இந்திய ஆடவர் அணி — பிரான்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

ஹாங்காங்கில் இந்திய நேரப்படி நண்பகல் 12 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

மகளிர் பிரிவில் இன்று பிறபகல் நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா — அமெரிக்கா அணியை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

கேலோ இண்டியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் லடாக் மற்றும் ஜம்மு-கஷ்மீரில் அடுத்த மாதம் 23-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஐஸ் ஹாக்கி, மலையேற்றம், பனிச்சறுக்கு உள்ளிட்ட போட்டிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கான வீரர் வீராங்கனைகளை அடையாளம் காண இந்த போட்டி உதவிடும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று சென்னையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணி ஒன்று – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி - ஒடிஸா அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ஹரியானா 37-26 என்ற புள்ளி கணக்கில் பெங்களூரு அணியையும், மற்றொரு போட்டியில் மும்பை அணி 47-31 என்ற புள்ளி கணக்கில் தமிழக அணியையும் வென்றன.

***<u>END OF NEWS</u>***